THE NEW INDIAN EXPRESS 3
★ MONDAY, NOVEMBER 23 | 2009 | MADURAI

# Be passionate, courageous, Srikkanth tells youth

Express News Service
Madurai, November 22

"THE youngsters should be passionate towards their interested fields and should have the 'dillu' (guts) to do what they want to do in their life", Indian cricket team selection committee chairman Krishnamachari Srikanth said here on Sunday.

Speaking at the 'Pride of South Tamil Nadu' award distribution function conducted by the Velammal Education Trust, Srikkanth said that the youngsters can succeed only if they have the same passion towards their field which SachinTendulkar has towards cricket. It is the strong passion which helps Sachin to remain as youthful and active in the international cricket even after 20 years. "If you are not passionate to something, please don't do it,," Srikanth told the students.


Mentioning actor Vickram's movie 'Dill', he said that in addition to passion, the youngsters need to have guts to swim against the flow. "You should not be scared to do something you want to do and something you think as right," Srikanth advised. Passion, courage and hard work can bring you to any heights, he added.

On honouring the Arvind Eye Care System, he said that the selection was an apt one considering the importance of eyesight in human life. "Even Sachin Tendulkar or Virendar Shewag could not have scored big numbers if they did not have extraordinary eyesight," he pointed out.

The award can motivate the students as there must be one of the future recipients of the same award sitting among them, he said.

M M Rajendran, former governor of Orissa, commemorated his acquaintance with G Venkitaswamy, founder of Aravind Eye Care System, in the early years when he took keen interest in the preventive eye care of children.

He asked the students to make the best use of the investment of money and time by their parents and teachers on them. They need to be brave enough to face the bitter outer world, though their mind does not recognise the harsh realities during their academic life.



Former Orissa governor M M Rajendran honouring P Namperumalsamy, Chairman of Aravind Eye Care System, with Velammal Education Trust's 'Pride of South Tamil Nadu Award - 09' in Madurai on Sunday. Indian Cricket team selection committee Chairman Krishnamachari Srikkanth and VET Chairman M V Muthuramalingam also seen

The youth should have the desire to conquer new heights and should fight to achieve the goals with all their zeal, enthusiasm and idealism. Above all, they should have the willingness to help the needy people also, he said.

N Murali, President of Chennai Music Academy, in his presidential address, praised the Aravind Eye Care System's services to the society and its cost management which manages to treat lakhs of patients visiting them with the fee charged by only 35 percent of the patients.

Aravind performs an average of 36,000 surgeries per year and every doctor in the hospital performs an average of 2,000 surgeries every year, which is a remarkable achievement. The Aravind model cost management has been a case study even in the foreign universities, he informed.

P Namperumalsamy, Chairman, Aravind Eye Care System, after receiving the award from Rajendran, said that it is the team work of all the staff of the Aravind group which brought it to greater heights. "If you think you can do one thing, do not heed to those who say it is impossible," he said referring Aravind's decision to produce intraocular lenses. It was produced in foreign only and one lens' cost was 120 dollar.

"We decided to produce them here though everybody said it was impossible. Presently, Aravind produces 3,000 lenses per day and each costs only three dollars," he said.

VET Chairman M V Muthuramalingam, who welcomed the gathering, expressed his hope that such programmes like awarding the achievers may motivate the students to be entrepreneurs in future.

VET CEO MVM Velmurugan read out the message sent by Home Minister P Chidambaram who could not attend the meeting.

MADURAI
THE HINDU • MONDAY, NOVEMBER 23, 2009

# Aravind Eye Care System given 'Pride of South Tamil Nadu' award

## Speakers praise it as a legendary institution and trailblazer in eye care



**MOMENTOUS:** *P. Namperumalsamy, centre, chairman, Aravind Eye Care System, receiving an award from M.M.Rajendran, former Governor of Orissa, at a college in Madurai on Sunday. (from left) N. Murali, Managing Director, The Hindu, Krishnamachari Srikkanth, former Indian cricket team captain, and M.V. Muthuramalingam, chairman, Velammal Educational Trust are seen.* – PHOTO: S. JAMES

Special Correspondent

**MADURAI:** The Aravind Eye Care System in Madurai was commended by speakers in a function held here on Sunday where it was conferred the 'Pride of South Tamil Nadu 2009' Award by the Velammal Educational Trust for its distinguished success.

N. Murali, Managing Director, *The Hindu*, who presided the award presentation function, said that the beauty of Aravind model was that it charged only for 30 to 35 per cent of patients and the remaining got treatment almost free of cost.

The hospital owed its success to its legendary founder G. Venkatasamy who evolved a model where low cost did not mean the standards were compromised, he said.

"Dr.Venkatasamy's dream was to eradicate treatable blindness and hence came out with a low cost health delivery model and that too not at the cost of excellence in treatment," Mr. Murali said.

Stating that Aravind Eye Care System is a worthy and fitting institution for the award, he added that the Aravind model became a case study in business schools too.

M.M. Rajendran, former Governor of Orissa, said that Aravind Eye Care System has been a trailblazer in eye care and its cross subsidisation model is benefiting lakhs of people particularly in rural areas.

The award, carrying a cash prize of Rs.1 lakh and a memento, was instituted by the Velammal Educational Trust, and it will be presented every year to eminent achievers in southern Tamil Nadu.

P. Namperumalsamy, Chairman, Aravind Eye Care System, who received the award on behalf of the institution, said that the hospital's founder took every obstacle as an opportunity.

M.V. Muthuramalingam, Chairman, Velammal Educational Trust, in his welcome address said that a chain of programmes were being organised in the group of Velammal educational institutions to motivate students for achieving success in their chosen fields.

Krishnamachari Srikkanth, Selection Committee Chairman, Board of Control for Cricket in India (BCCI), congratulated the Aravind Eye Care System and said that the award would motivate people to achieve more.


MADURAI
THE HINDU • MONDAY, NOVEMBER 23, 2009

RIGHT PITCH

# Sachin's success formula

"If you yourself don't have belief in you, how can you expect others to believe you"

Shastry V. Mallady



EULOGY: *Former Indian cricket team captain Krishnamachari Srikkanth at a college in Madurai on Sunday.* – PHOTO: S. JAMES

**MADURAI:** It was a good pitch for former Indian cricket team captain Krishnamachari Srikkanth to bat for Sachin Tendulkar in Madurai on Sunday and list out success secrets of the prodigal batsman whose cricket career crossed two decades and is still going strong.

"Sachin is a cricketer with good eyesight...and as commentators say, he has a terrific eye for the ball. A player without good eye sight cannot become a good cricketer because it takes only 0.3 seconds for the ball to come from bowler's end to the batsman at crease," Mr. Srikkanth, who is now the Chairman of Indian team selection committee of BCCI, said.

He was here to participate in a function organised by the Velammal Educational Trust to present the 'Pride of South Tamil Nadu Award' to Aravind Eye Hospital. Mr. Srikkanth went on to give some tips to students by showing Tendulkar as perfect example of success.

"If Sachin Tendulkar is still successful even after playing 20 years of cricket, there must be a reason...and students must know it," he said.

According to the former captain, though many batsmen have same playing technique or physical ability, what puts Sachin apart is his mental ability.

"Whatever Sachin is doing on cricket field, he does it with passion and plays with confidence. So, nothing is impossible if you have faith in yourself. If you have no faith in yourself, how can you expect others to have faith in you?" Mr. Srikkanth who is an electrical engineer, asked the students. N. Murali, Managing Director, *The Hindu*, M. M. Rajendran, former Orissa Governor, and M. V. Muthuramalingam, Chairman, Velammal Educational Trust, were among those who participated in the award presentation function.

தினகரன் 3
மதுரை 23 நவம்பர் 2009

# துல்லியமான பார்வைத்திறனே சச்சின் சாதனைக்கு காரணம்

## கிரிக்கெட் தேர்வுக்குழு தலைவர் ஸ்ரீகாந்த் பேச்சு

மதுரை, நவ. 23: 'ஈடுபாடும், தன்னம்பிக்கையும் இருந்தால் எத்துறையிலும் வெற்றி அடையலாம். ஆர்வம் மற்றும் துல்லியமான பார்வைத்திறனே, சச்சின் டெண்டுல்கர் சாதனைக்குக் காரணம்' என இந்திய கிரிக்கெட் அணி தேர்வுக்குழு தலைவர் ஸ்ரீகாந்த் பேசினார்.

வேலம்மாள் கல்வி அறக்கட்டளை சார்பாக அரவிந்த் கண் மருத்துவமனைக்கு 'தென் தமிழகத்தின் பெருமை' என்ற விருது வழங்கும் விழா மதுரையில் நேற்று நடைபெற்றது. முன்னாள் கிரிக்கெட் வீரர் மற்றும் இந்திய கிரிக்கெட் அணி தேர்வுக்குழு தலைவர் ஸ்ரீகாந்த் விழாவை துவக்கி வைத்துப் பேசியதாவது:

மனிதனுக்கு கண் பார்வை மிகவும் அவசியமானது. அத்தகைய பார்வையை அளிப்பதற்காக சமுதாயத்திற்கு சிறந்த சேவையை கடந்த பல ஆண்டுகளாக செய்து வரும் அரவிந்த் கண் மருத்துவமனைக்கு இவ்விருதை வழங்கியிருப்பது பொருத்தமானது. கிரிக்கெட் விளையாடுவதற்கும் மிகவும் துல்லியமான பார்வை அவசியம். சச்சின் டெண்டுல்கர் தனது துல்லியமான பார்வை திறமை மற்றும் ஆர்வம், ஈடுபாட்டால் தான் பல சாதனைகளை படைத்துள்ளார்.

மாணவர்கள் எந்த ஒரு செயலில் ஈடுபடும் போதும் ஆர்வமும், ஈடுபாடும் மிகவும் அவசியம். தன்னம்பிக்கையுடன், தைரியமாக எந்த செயலிலும் ஈடுபட வேண்டும். ஆர்வம், ஈடுபாடு மற்றும் தன்னம்பிக்கை இருந்தால் எத்துறையிலும் வெற்றி அடையலாம்.

இவ்வாறு பேசினார். வேலம்மாள் கல்வி அறக்கட்டளை தலைவர் முத்துராமலிங்கம் தலைமை வகித்தார். ஒரிசா முன்னாள் கவர்னர் ராஜேந்திரன் அரவிந்த் கண் மருத்துவமனைக்கான விருதை அதன் தலைவர் டாக்டர் நம்பெருமாள்சாமியிடம் வழங்கினார். அவர் தனது உரையில் 'இளைஞர்கள் அனைவருக்கும் வாய்ப்பு கிடைக்கிறது. வாய்ப்பை முறையாக பயன்படுத்தி கடினமாக உழைத்து வெற்றி பெறுபவர்களால் மட்டுமே சாதனைகள் படைக்க முடிகிறது. கல்வியை வழங்குவதில் தனியார் துறையும் பங்கேற்பதன் மூலம் கல்விக்கான கட்டமைப்பை மேம்படுத்த இயலும். மாணவர்கள் கல்லூரி படிப்போடு இருந்துவிடாமல் வாழ்நாள் முழுவதும் படித்துக் கொண்டே இருக்க வேண்டும். அப்போது தான் முழுவளர்ச்சியை எட்ட இயலும்' என்றார்.

இந்து பத்திரிக்கை நிர்வாக இயக்குனர் முரளி முன்னிலை வகித்தார். இந்நிகழ்ச்சியில் வேலம்மாள் கல்வி அறக்கட்டளை நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



மதுரையில் வேலம்மாள் கல்வி அறக்கட்டளையின் 'தென் தமிழகத்தின் பெருமை 2009' விருதை ஒரிசா மாநில முன்னாள் ஆளுநர் ராஜேந்திரன், அரவிந்த் கண் மருத்துவமனையின் தலைவர் நம்பெருமாள்சாமியிடம் வழங்கினார். அருகில் இந்து பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் முரளி, இந்திய கிரிக்கெட் அணி தேர்வுக்குழுத்தலைவர் ஸ்ரீகாந்த் மற்றும் வேலம்மாள் கல்வி அறக்கட்டளை தலைவர் முத்துராமலிங்கம்.

# நல்ல மாணவர்கள் உருவாக தரமான ஆசிரியர்கள் அவசியம்

## ஒரிசா முன்னாள் ஆளுநர் எம்.எம்.ராஜேந்திரன்

மதுரை, நவ. 22: நல்ல மாணவர்கள் உருவாக தரமான ஆசிரியர்கள் அவசியம் என்று ஒரிசா மாநில முன்னாள் ஆளுநர் எம்.எம்.ராஜேந்திரன் பேசினார்.

வேலம்மாள் கல்வி அறக்கட்டளை சார்பில் மதுரையில் உள்ள அரவிந்த் கண் மருத்துவமனைக்கு 'தென் தமிழகத்தின் பெருமை-2009' விருது வழங்கும் விழா மதுரையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் எம்.எம்.ராஜேந்திரன் பேசியதாவது:

அரவிந்த் கண் மருத்துவமனை சமுதாய நோக்குடன் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும், வங்கதேசம், இந்தோனேசியா போன்ற வெளிநாடுகளிலும் சிறப்பான சேவை அளித்து வருகிறது. அந்த நிறுவனத்துக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது மிகவும் பாராட்டுக்குரியதாகும்.

நமது நாடு பொருளாதார வளர்ச்சியில் வேகமாக முன்னேறி வருகிறது. உலகமயமாக்கல் காரணமாக நாம் சர்வதேச சந்தையில் பல்வேறு போட்டிகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. அப்படிப்பட்ட சூழலில் போட்டிகளைச் சமாளிக்க வேண்டுமானால் நவீன தொழில்நுட்பத்தை பின்பற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இன்றைய சூழ்நிலையில் நாம் மாணவர்களுக்கு தரமான கல்வியைத் தரவேண்டியது அவசர அவசியமாகும். இன்று புற்றீசல் போல நாட்டில் கல்வி நிறுவனங்கள் தோன்றினாலும் பெரும்பாலானவற்றால் தரமான கல்வியை மாணவர்களுக்கு அளிக்க முடியவில்லை. இது கவலை தரும் விஷயமாகும்.

மாணவர்களுக்கு தரமான உயர்கல்வியை உறுதி செய்ய வேண்டுமானால், கல்வி நிறுவனங்கள் தரமான ஆசிரியர்களை பணிக்கு அமர்த்த வேண்டும். இதற்கு கூடுதலாகச் செலவாகலாம். ஆனால், நிர்வாகத்தினர் இதைப் பொருட்படுத்தாமல் செயல்படுத்த முன்வரவேண்டும். கல்வி வளர்ச்சியில் தனியாரின் பங்கு முக்கியமானது.

மாணவர்கள் வகுப்பில் நடத்தும் பாடங்களை மட்டும் படிக்காமல் பொது அறிவுத் திறனையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். திறமையான மாணவர்களாக இருந்தால் மட்டும் போதாது, நல்ல ஒழுக்கமான மாணவர்களாக இருக்க வேண்டும்.

இன்றைய சூழலில் உயர்கல்வி என்பது அதிக செலவுபிடிப்பதாக உள்ளது. தகுதியான மாணவர்களுக்கு உயர்கல்வி மறுக்கப்படக்கூடாது. மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப், கல்விக் கடன் போன்ற வசதிகள் இருந்தபோதிலும் அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தருவது அவசியம் என்றார் எம்.எம்.ராஜேந்திரன்.

விழாவில், அரவிந்த் கண் மருத்துவமனைத் தலைவர் டாக்டர் ப.நம்பெருமாள்சாமியிடம் 'தென் தமிழகத்தின் பெருமை- 2009' விருதை எம்.எம்.ராஜேந்திரன் வழங்கினார்.

நிகழ்ச்சிக்கு ஹிந்து நாளிதழ் நிர்வாக இயக்குநர் என்.முரளி தலைமை வகித்துப் பேசுகையில், அரவிந்த் மருத்துவமனை சமுதாயத்துக்கு ஆற்றிவரும் சேவைகளைப் பாராட்டினார். குறைந்த செலவில் அதிகம் பேருக்கு சிகிச்சை அளிக்கும்போது சில தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆனால், அரவிந்த் கண் மருத்துவமனை எத்தனைப் பேர் வந்தாலும் அவர்கள் அனைவருக்கும் முறையான சிகிச்சை அளித்து வருவது பாராட்டத்தக்கது என்றார்.

அரவிந்த் கண் மருத்துவமனைத் தலைவர் டாக்டர் ப.நம்பெருமாள்சாமி ஆற்றிய ஏற்புரை:

அரவிந்த் கண் மருத்துவமனையானது 1976-ம் ஆண்டில் 11 படுக்கைகளுடன் டாக்டர் வெங்கிடசாமி மற்றும் 5 பேருடன் ஆரம்பிக்கப்பட்டது. இன்றைக்கு பெரும் வளர்ச்சியைப் பெற்றிருப்பதற்குக் காரணம், கடின உழைப்பும், சமூக அர்ப்பணிப்பும்தான்.

எங்கள் மருத்துவமனைகள் மூலம் 35 சதவீதம் பேர் பணம் செலுத்தும் பிரிவிலும், 65 சதவீதம் பேர் இலவசப் பிரிவிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்,

தற்போது ஆண்டுக்கு 3 லட்சம் கண் அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டு வருகின்றன. இதை 10 லட்சம் எண்ணிக்கையாக உயர்த்த வேண்டும் என்பதுதான் எங்கள் நோக்கமாகும் என்றார்.

விழாவில், வேலம்மாள் கல்வி அறக்கட்டளைத் தலைவர் எம்.வி.முத்துராமலிங்கம் வரவேற்றுப் பேசுகையில், 'ஆண்டுதோறும் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்து 'தென் தமிழகத்தின் பெருமை' விருது வழங்க முடிவு செய்துள்ளோம்.

முதன் முறையாக இந்த ஆண்டுக்கான விருது மதுரை அரவிந்த் கண் மருத்துவமனைக்கு வழங்கப்படுகிறது. ரூ.1 லட்சம் ரொக்கமும், பாராட்டுப் பத்திரமும் இதில் அடங்கும்.

மாணவர்களுக்கு கல்வி அளிப்பது மட்டுமன்றி அவர்களை உற்சாகப்படுத்தவும், ஊக்குவிக்கும் வகையில் 'வாழ்வில் முன்னேறிய நபர்களை அழைத்து வந்து இதுபோன்ற நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறோம். இது அவர்கள் முன்னேற்றத்துக்கு உதவும் என்றார் அவர்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் தேர்வுக் கமிட்டித் தலைவர் கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த், கல்லூரி முதல்வர் என்.சுரேஷ்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

விழா முடிவில் வேலம்மாள் கல்வி நிறுவனங்களின் தலைமைச் செயல் அலுவலர் எம்.வி.எம். வேல்முருகன் நன்றி கூறினார்.



விழாவில், அரவிந்த் கண் மருத்துவமனைத் தலைவர் டாக்டர் ப.நம்பெருமாள்சாமியிடம் (வலமிருந்து 3-வது) 'தென் தமிழகத்தின் பெருமை-2009' எனும் விருதை வழங்குகிறார் ஒரிசா மாநில முன்னாள் ஆளுநர் எம்.எம்.ராஜேந்திரன். உடன், (வலமிருந்து) வேலம்மாள் கல்வி அறக்கட்டளை நிறுவனர் எம்.வி.முத்துராமலிங்கம், கிரிக்கெட் வீரர் கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த், ஹிந்து பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் என்.முரளி.



மதுரை வேலம்மாள் கல்வி அறக்கட்டளை சார்பில் தென்தமிழகத்தின் பெருமை 2009 என்ற விருதினை ஒரிசா மாநில முன்னாள் ஆளுநர் ராஜேந்திரன் அரவிந்த் கண் மருத்துவமனைக்கு அதன் தலைவர் நம்பெருமாள்சாமியிடம் வழங்கிய போது எடுத்தபடம். அருகில் இந்திய கிரிக்கெட் தேர்வுக்குழு தலைவர் ஸ்ரீகாந்த், அறக்கட்டளையின் தலைவர் முத்துராமலிங்கம் ஆகியோர் உள்ளனர்.

### வேலம்மாள் கல்வி அறக்கட்டளை சார்பில் விருது வழங்கும் விழா:

# நம்பிக்கை, உற்சாகத்துடன் செயல்பட்டால் நிச்சயம் வெற்றி கிடைக்கும்

## முன்னாள் கிரிக்கெட் வீரர் ஸ்ரீகாந்த் பேச்சு

மதுரை, நவ.23-

நம்பிக்கை, உற்சாகத்துடன் செயல்பட்டால் நிச்சயம் வெற்றி கிடைக்கும் என்று வேலம்மாள் கல்வி அறக்கட்டளை சார்பில் நடந்த விருது வழங்கும் விழாவில் முன்னாள் கிரிக்கெட் வீரர் ஸ்ரீகாந்த் கூறினார்.

### தென் தமிழகத்தின் பெருமை

வேலம்மாள் கல்வி அறக்கட்டளை, அதன் வெள்ளி விழா ஆண்டை முன்னிட்டு மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. அதன் ஒருபடியாக "தென் தமிழகத்தின் பெருமை" என்ற விருதினை ஏற்படுத்தி உள்ளது. பொதுமக்களுக்கு சமுதாய நோக்குடன் சேவை செய்வதுடன் பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு ஆண்டு தோறும் இந்த விருதினை வழங்க முடிவு செய்துள்ளது. இதன்படி இந்த ஆண்டுக்கான தென் தமிழகத்தின் பெருமை 2009 விருது மதுரை அரவிந்த் கண் ஆஸ்பத்திரிக்கு வழங்கப்பட்டது.

இதற்கான விழா விரகனூரில் உள்ள வேலம்மாள் என்ஜினீயரிங் கல்லூரியில் நேற்று நடந்தது. விழாவிற்கு இந்து பத்திரிகை சென்னை பதிப்பின் நிர்வாக இயக்குனர் என்.முரளி தலைமை தாங்கினார். வேலம்மாள் கல்வி அறக்கட்டளையின் தலைவர் எம்.வி.முத்துராமலிங்கம் முன்னிலை வகித்தார். ஒரிசா மாநில முன்னாள் கவர்னர் எம்.எம்.ராஜேந்திரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ரூ.1 லட்சம் ரொக்கப் பரிசுடன் கூடிய தென் தமிழகத்தின் பெருமை 2009 விருதினை, அரவிந்த் கண் ஆஸ்பத்திரியின் தலைவர் டாக்டர் பி.நம்பெருமாள்சாமியிடம் வழங்கினார்.

### ஸ்ரீகாந்த்

விழாவில் இந்திய கிரிக்கெட் அணியின் தேர்வுக்குழுத்தலைவரும் முன்னாள் கிரிக்கெட் வீரருமான ஸ்ரீகாந்த் வாழ்த்தி பேசும்போது கூறியதாவது:-

கடவுள் மனித வடிவில் வந்து பொதுமக்களுக்கு சேவை செய்வதாக கூறுவார்கள். அப்படித்தான் இது போன்ற சில நிறுவனங்களின் உரிமையாளர்கள் வடிவத்தில் கடவுள் நேரில் வந்து பிரச்சினைகளை தீர்த்து வைக்கிறார். கண் பார்வையில் குறைபாடு ஏற்பட்டால் அந்த மனிதனின் வாழ்வில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படும். ஒரு சிறந்த கிரிக்கெட் வீரருக்கு முக்கியத் தேவை சிறப்பான கண் பார்வைதான். ஒரு புறம் இருந்து வேகமாக வரும் பந்தினை அவர் பார்த்து கவனித்து விளையாடினால்தான் வெற்றி பெற முடியும். கிரிக்கெட் மட்டுமின்றி வாழ்க்கை விளையாட்டும் அப்படித்தான். கல்வியில் சரியான பார்வைதான் மாணவர்களுக்கு சிறப்பான எதிர்காலத்தை உருவாக்கும். ஒரு மனிதனின் வெற்றி தொடர அவனை உற்சாகப்படுத்துவது அவசியம். அந்த பணியைத்தான் வேலம்மாள் கல்வி அறக்கட்டளை விருது வழங்குவதன் மூலம் செய்கிறது. மாணவர்களாகிய நீங்களும் ஒரு நாள் இந்த விருதினை பெறலாம். அதற்கு முதலில் உங்கள் மீது நீங்கள் நம்பிக்கை வைக்க வேண்டும். அடுத்ததாக உற்சாகத்துடன் செயல்பட வேண்டும். தொடர்ந்து ஏதையும் சாதிக்கும் திறன் வேண்டும். இந்த மூன்றும் இருந்தால் உங்களுக்கு நிச்சயம் வெற்றி கிடைக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

வேலம்மாள் கல்வி நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரி எம்.வி.எம்.வேல்முருகன் நன்றி கூறினார். விழாவில் வேலம்மாள் கல்வி நிறுவனங்களின் ஆசிரியர்கள், அலுவலர்கள், மாணவ, மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர். விழா ஏற்பாடுகளை வேலம்மாள் என்ஜினீயரிங் கல்லூரி முதல்வர் என்.சுரேஷ்குமார், ஒருங்கிணைப்பாளர் சி.செல்வராஜ் ஆகியோர் செய்திருந்தனர்.

# எதிலும் வெற்றிபெற துணிச்சல் அவசியம்

மதுரை, நவ.22: எந்தச் செயலிலும் வெற்றி பெறுவதற்கு துணிச்சலும், விடா முயற்சியும் அவசியம் என்று இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டனும், இந்தியக் கிரிக்கெட் குழு தேர்வு கமிட்டியின் தலைவருமான கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த் வலியுறுத்தினார்.

வேலம்மாள் கல்வி அறக்கட்டளை சார்பில் அரவிந்த் கண் மருத்துவமனைக்கு தென் தமிழகத்தின் பெருமை-2009' என்ற விருது வழங்கும் விழா ஞாயிற்றுக்கிழமை மதுரையில் நடைபெற்றது. இவ்விழாவில் அவர் பேசியதாவது:

மனிதனுக்கு கண் பார்வை மிகவும் அவசியம். பார்வையற்ற லட்சக்கணக்கான மக்களுக்கு சிகிச்சை மூலம் பார்வை அளித்து அவர்கள் வாழ்வில் ஒளியேற்றி வரும் அரவிந்த் மருத்துவமனையின் சேவை பாராட்டுக்குரியது.



ஒரு நல்ல கிரிகெட் வீரவாக உருவாக வேண்டுமானால் அவர்களுக்கு கூரிய பார்வை இருப்பது அவசியம். கிரிக்கெட் ஆட்டத்தில் எதிர் முனையில் இருந்து 0.3 வினாடியில் வரும் பந்தானது பேட்ஸ்மேனை அடையும்போது அதைத் துல்லியமாக பார்த்து, கணித்து அடிப்பதற்கு கூரிய பார்வை மிக அவசியம்.

ஒருவர் சிறந்த பேட்ஸ்மேனாகவோ, பௌலராகவோ, பீல்டராகவோ இருக்கவேண்டுமானால் அவருக்கு நவீன உத்திகளுடன் தெளிவான பார்வை இருப்பது முக்கியமானது.

இந்திய அணியில் சச்சின் டெண்டுல்கர் 20 ஆண்டுகள் விளையாடி சாதனை படைத்துள்ளார். அதற்கு அவரது தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும், கிரிக்கெட் விளையாட்டுமீது இருக்கும் ஆர்வமுமே காரணமாகும்.

மாணவர்களாகிய நீங்கள் எந்த ஒரு துறையை எடுத்துக் கொண்டாலும் அதில் ஆர்வத்துடனும், தன்னம்பிக்கையுடனும், துணிச்சலுடனும் செயல்பட்டால் சாதனை படைக்க முடியும்.

இன்றைய மாணவர்கள்தான் நாளைய சமுதாயச் சிற்பிகள். நீங்கள் ஒரு விஞ்ஞானியாகவோ, டாக்டராகவோ, தொழில் முனைவராகவோ உருவாகி சமுதாயத்துக்கு சிறப்பான செய்தால் இதுபோன்ற விருதுகள் உங்களைத் தேடிவரும்.

வேலம்மாள் கல்வி அறக்கட்டளையானது மாணவர்களிடையே தன்னம்பிக்கை, உற்சாகத்தை ஏற்படுத்தும் வகையில் இதுபோன்ற நிகழ்ச்சிகளை நடத்துவது பாராட்டுக்குரியது என்றார் ஸ்ரீகாந்த்.



மதுரை வேலம்மாள் கல்வி அறக்கட்டளை சார்பில் அரவிந்த் கண் ஆஸ்பத்திரிக்கு 'தென் தமிழகத்தின் பெருமை -2009' விருதை, அதன் தலைவர் டாக்டர் பி.நம்பெருமாள்சாமியிடம் ஒரிசா முன்னாள் கவர்னர் எம்.எம்.ராஜேந்திரன் வழங்கினார். அருகில் இடமிருந்து 'இந்து' நாளிதழ் நிர்வாக இயக்குனர் என்.முரளி, கிரிக்கெட் தேர்வு குழு தலைவர் ஸ்ரீகாந்த், அறக்கட்டளை தலைவர் எம்.வி.முத்துராமலிங்கம், தலைமை நிர்வாக அதிகாரி எம்.வி.எம்.வேல்முருகன்.

# மதுரை அரவிந்த் கண் ஆஸ்பத்திரிக்கு 'தென் தமிழகத்தின் பெருமை' விருது

மதுரை, நவ. 23-

மதுரை அரவிந்த் கண் ஆஸ்பத்திரிக்கு வேலம்மாள் கல்வி அறக்கட்டளை சார்பில் 'தென் தமிழகத்தின் பெருமை -2009' விருது நேற்று வழங்கப்பட்டது.

விரகனூர் வேலம்மாள் இன்ஜினியரிங் கல்லூரியில் நடந்த இவ்விழாவிற்கு இந்து நாளிதழ் நிர்வாக இயக்குனர் என்.முரளி தலைமை வகித்தார். அறக்கட்டளை தலைவர் எம்.வி.முத்துராமலிங்கம் வரவேற்றார்.

அரவிந்த் கண் ஆஸ்பத்திரி தலைவர் டாக்டர் பி.நம்பெருமாள்சாமியிடம் ''தென் தமிழகத்தின் பெருமை-2009'' விருதை ஒரிசா மாநில முன்னாள் கவர்னர் எம்.எம்.ராஜேந்திரன் வழங்கினார். மேலும் ஒரு லட்சம் ரூபாய்க்கான செக் வழங்கப்பட்டது.

இந்திய கிரிக்கெட் தேர்வு குழு தலைவர் ஸ்ரீகாந்த் பேசுகையில், ''பார்வை சரியாக இல்லாவிட்டால் வாழ்க்கையில் மட்டுமில்லாமல் கிரிக்கெட்டில் கூட சிறந்த வீரராக சாதிக்க முடியாது. பவுலரிடமிருந்து பந்து 0.3 நொடிகளில் பேட்ஸ்மேனிடம் வருகிறது. அதற்குள் பேட்ஸ்மேன் பந்தை கவனித்து அடித்து ரன் எடுக்க பார்வை அவசியம். வாழ்க்கையில் வெற்றி பெற தன்னம்பிக்கை அவசியம். உங்கள் மீது நீங்கள் நம்பிக்கை வைத்தால் தான் மற்றவர்கள் வைப்பர். விடா முயற்சி தேவை.

கிரிக்கெட் வீரர் சச்சின் இருபது ஆண்டுகளையும் கடந்து இன்றும் சாதிக்கிறார். அதற்கு காரணம் அவருடைய விடா முயற்சியே. ஏனோ தானோ என காரியங்களை செய்ய கூடாது. எதிலும் 'தில்' இருக்க வேண்டும்'' என்றார். கிரிக்கெட் பயிற்சி கூடத்தை அவர் திறந்து வைத்தார். டாக்டர் பி.நம்பெருமாள்சாமி ஏற்புரையாற்றினார். தலைமை நிர்வாக அதிகாரி எம்.வி.எம்.வேல்முருகன் நன்றி கூறினார். ஏற்பாடுகளை கல்லூரி முதல்வர் என்.சுரேஷ்குமார், ஒருங்கிணைப்பாளர் சி.செல்வராஜ் செய்திருந்தனர்.